ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

चलदल दल चञ्चलमिममचलवदचलं प्रतीत्य किल कायम् ।
मुह्यसि शिवपदविमुखं शिव शिव सुमचापचापलैश्चेत: ॥

சலதலதல சஞ்சலமிமமசலவதசலம் ப்ரதீத்ய கில காயம் ।
முஹ்யஸி ஶிவபதவிமுகம் ஶிவ ஶிவ ஸுமசாபசாபலைஶ்சேதஃ ॥

हे चेत:—ஓ மனமே
चलदल—(அசைந்த இலையுள்ள)
दल—இலைபோல் [அரசமரத்தின்
चञ्चलं—சஞ்சலமாயிருக்கின்ற
इमं—இந்த
कायं—சரீரத்தை
अचलवत्—(அசையாத) மலை போல்
अचलं—(அழியாமல்) ஸ்திரமா யிருப்பதாக

प्रतीत्य किल—நினைத்துக்கொண் டல்லவா
शिव शिव—சிவ! சிவ!!
सुमचाप—மன்மதனுடைய
चापलै:—சாபல்யத்தால்
शिवपद—பரமசிவனது பாதார விந்தத்தில்
विमुखं—பராங்முகமாயிருந்து
मुह्यसि—மோஹமடைகின்றாயே.

எவ்வளவு சொல்லியும் கெவனிக்காமல் மனமே! மறுபடியும் மயங்குகின்றாயே. மஹாபுண்ணிய வசத்தால் கிடைத்த மானிடப் பிறவியெடுத்தும் மேற்செல்வதற்குரிய ஸாதனங்களைத் தேட நீ முயல வில்லையே. இப்பிறவி மாறினால் எப்பிறவி கிடைக்குமோ? இச்சரீரம் நன்றாயிருப்பதற்குள்ளாகவே சிரேயஸ்ஸை அடைய வழி தேட வேண்டாமா? இச்சரீரந்தான் எவ்வளவு நாள் நிற்கப்போகின்றது. இது அரசமரத்தின் இலை போல் ஆடிக்கொண்டிருக்கின்றது. அங்ஙனம் நீ தெரிந்து கொள்ளாமல் அசைவற்ற மலைபோல் அழியாமல் நெடுநாள் நிற்கப்போகிறதாக நினைத்துக் கொண்டு விட்டாயே. அப்படி நீ நினைக்கவில்லையானால் பரமசிவனது பொற்பாத கமலத்தினின்று விலகுவாயா? மன்மதன் செய்துவிட்ட சாபல்யத்திற்கு ஆளாவாயா? அதனால் மயங்கி விழுவாயா? ஒரு பொழுதுமிப்படியிருக்கமாட்டாய். நீர்மேல் குமிழியான இக்காயத்தை ஸ்திரமாக நினைத்துக் கொண்டல்லவா நீ பரமசிவபதத்தினருகில்க் கூட நாடாமல் புஷ்பபாணனுடைய பாணங்களாலடிபட்டு மோஹமடைகின்றாய். இனிமேலாவது அப்படியிருக்காதே. சாஸ்திரங்களிற் கூறிய சிறந்த ஸாதனங்களைச் சிரமப்பட்டாவது தெரிந்துகொண்டு சிரேயஸ்ஸை அடையு சீக்கிரம் முயலுவாயாக.

சுபம்!

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ புரட்டாசி-௴ ௧௩௨

ஸம்ஸ்காரம்.

4-வது ஜாதகர்மம்.

(102-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்விதமாக அன்னையின் கர்ப்பாசயத்தில் பத்துமாஸம் பூர்ணமாயிருந்து ஒரு நாள் ஜனிக்கின்றான். புத்திர ஜனனத்தைக் கேட்டவுடன் பிதா நதியிலாவது வேறு புண்ணிய தீர்த்தத்திலாவது அலையடித்து ஜலத்துளி கிளம்பும்படி மூழ்கி மூழ்கி ஸசேல ஸ்னானம் செய்ய வேண்டியது. நதி முதலிய புண்ணிய தீர்த்தம் கிடைக்காவிடினும் ஏதேனும் குளிர்ந்த ஜலத்தில்தான் இந்த ஸ்னானம் செய்யவேண்டும். இரவிலானாலும் அப்பொழுதே செய்யவேண்டியதுதான். இரவில் குளம் முதலியவிடத்திற்கு செல்ல முடியாவிட்டால், பகலில் கிரஹத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட ஜலத்தில் சுவர்ணத்தைப் போட்டு அக்கினியினுடைய ஸந்நிதியில் ஸ்னானம் செய்யலாம். இரவில் ஸ்னானம் செய்யக் கூடாதென்று நிஷேதித்திருப்பது, கிரஹணம், ஸங்கிராந்தி, புத்திர ஜனனம் முதலியவற்றைத் தவிர வேறு விஷயத்திலாகும். இங்ஙனம் ஸ்னானம் செய்துவிட்டு ஜாதகர்மமென்னும் ஸம்ஸ்காரத்தை அவரவர்களது கிருஹ்யஸூத்திரத்தில் கூறியிருக்கும் பிரகாரமாகச் செய்யவேண்டியது. கோதானம், பூமிதானம், ஸுவர்ணதானம் பீஜ (விரை) தானம பூரிதானம் முதலிய தானங்களையும் சக்திக்குத் தக்கவாறு செய்யவேணும். பிதிருக்களையுத்தேசித்து ஆமரூபமாகவும், ஹிரண்யரூபமாகவும், சிராத்தம் செய்யவேண்டும். மானிட லோகத்தில் கர்மாதிகாரியாயிருப்பவனுக்கு ஸந்ததியுண்டானால் தேவதைகள் பிதிருக்கள் முதலியவர்கள் ஸந்தோஷப்படுவதோடு அவ்விடத்திற்கே வருகின்றார்களாம். அதனால் அந்ததினம் மிகுந்த புண்ணியதினமாம். அதினால் அவர்களை சிராத்தாதிகளால்

ஆராதிக்க வேண்டியதாம். புத்திர ஜனனப்பிரயுக்தமான ஜனனாசௌசம் அச்சமயமுண்டல்லவா? அப்பொழுது தானம் சிராத்தம் முதலியவைகளை எப்படிச் செய்யக்கூடுமென்று ஆசங்கை செய்யக் கூடாது. தொப்புள்கொடி அறுப்பதற்கு முந்தி ஆசௌசமில்லையாம். அந்தப்பிதாவுக்கு அச்சமயம் சுத்தியுண்டாகின்றது. அதனால் அப்பொழுது பிதிருக்களையுத்தேசித்து நாந்தீ சிராத்தம் செய்யலாம். தொப்புள்கொடியறுத்து விட்டாலும் அன்று முழுவதும் தானம்செய்யலாம். இந்தக்காலத்தில் செய்யப்படும் தானத்தை ஞாதிகளுக்கும் கொடுக்கவேண்டுமாம். அவர்களும் வாங்கிக் கொள்ளலாம் அப்பொழுதே ஜாதகர்மம் செய்வதில் நாள் ஒன்றும் பார்க்கவேண்டியதில்லையென்று ஓர் பக்ஷமுண்டு. ஆனால் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில்

"व्यतीपाते च संक्रान्तौ ग्रहणे वैधृतावपि ।
श्राद्धं विना शुभं कर्म प्राप्तकालेऽपि नाचरेत् ॥"

" வ்யதீபாதே ச ஸங்க்ராந்தௌ க்ரஹணே வைத்ருதாவபி।
ச்ராத்தம் விநா சுபம் கர்ம ப்ராப்தகாலே(அ)பி நாசரேத் "॥

'வ்யதீபாதம், வைதிருதி என்கிற யோகங்களிலும், ஸங்கிராந்தியிலும், கிரஹணத்திலும், சிராத்தத்தைத் தவிர வேறு சுபகர்மங்கள் பிராப்தமானாலும செய்யக் கூடாது'' என்று நிஷேதமிருப்பதால் ஜாதகர்மாதி சுபங்களை நாள் பார்த்தே செய்ய வேண்டுமென்றேற்படுகின்றது. அதனாற்றான் ஜாதகர்மத்திற்கு வேறு காலமும் ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றது. அங்ஙனமே நாரதஸ்மிருதியில்

"तस्मिन् जन्ममुहूर्ते तु सूतकान्तेऽथवा शिशोः ।
जातकर्म च कर्तव्यं पितृपूजनपूर्वकम् ॥"

" தஸ்மிந் ஜந்மமுஹூர்த்தே து ஸூதகாந்தே(அ)தவா சிசோ:।
ஜாதகர்ம ச கர்தவ்யம் பித்ருபூஜநபூர்வகம் ॥

'ஜனனமானவுடனாவது, ஸூதகம் விலகின பிறகாவது சிசுவுக்கு, ஜாதகர்மத்தை பிதிருதேவதைகளின் ஆராதன பூர்வகமாகச் செய்ய வேண்டியது'

என்று கூறப்படுகின்றது. ஜனனமானவுடன் ஜாதகர்மத்தைச்செய்வதற்கே நாள்பார்க்கவேண்டுமென்றால் பின்னிட்டுச்செய்யுங்கால் நாள் பார்க்க வேண்டுமென்று கண்டிப்பாய் ஏற்படுகின்றது

அதனுற்றான் முகூர்த்தக் கிரந்தங்களில் இதற்கு நல்ல நாள் கூறப்படுகின்றது. ஒரு ஸமயம் ஜனனகாலத்தில் பிதா ஊரிலில்லாமலிருந்து விட்டாலும், ஊரிலிருந்தும் வேறு இடையூறுகள் நேர்ந்திருந்தாலும் ஜாதகர்மத்தை உடனே செய்ய முடியாது. 11-வது நாள் அல்லது 12-வது நாளிலாவது கௌணகாலத்தில் செய்யவேண்டியதாகும். அதிலும் செய்யத் தவரிவிட்டால் ஸ்மிருதிகளில் கூறப்படும் பிராயச்சித்தத்தைச் செய்துவிட்டு அடுத்த ஸம்ஸ்காரம் செய்யும்பொழுது முந்திய ஸம்ஸ்காரங்களைச் செய்ய வேண்டியது. இவ்வாறு செய்யப்படும் ஜாதகர்மத்தினுல் என்ன பயன் ஏற்படுகின்றது என்றால் அது சாஸ்திரங்களில் கூறப்படுகின்றது.

"जातकर्मक्रियां कुर्यात्पुत्रायुःश्री विवृद्धये ।
ग्रहदोषविनाशाय सूतकाशुभविच्छिदे ॥
कुमारग्रहनाशाय पुंसां सत्वविवृद्धये । "

"ஜாதகர்மக்ரியாம் குர்யாத்புத்ராயு:ஶ்ரீவிவ்ருத்தயே ।
க்ரஹதோஷவிநாஶாய ஸூதகாஶுபவிச்சிதே ॥
குமாரக்ரஹநாஶாய பும்ஸாம் ஸத்வவிவ்ருத்தயே" ॥

'ஜனித்த சிசுவிற்கு ஆயுஸ், ஸகலஸம்பத்து, விருத்தியடைவதற்கும் ஜனன காலத்தில்நவக்கிரஹங்களாலேற்பட்ட தோஷங்கள் விலகுவதற்கும் ஸூதகத்தாலேற்பட்ட அசுபம் விலகுவதற்கும் குமாரக்கிரஹங்கள் என்று சொல்லப்படும் சில கிரஹங்களின் பாதை நீங்குவதற்கும், ஸத்வகுணம் மேலிடுவதற்குமாக ஜாதகர்மம் என்ற ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டும்.' என்பதாதிஆங்காங்கு விரிவாய்க் கூறப்படுகின்றது. அஷ்டாங்க ஸங்கிரஹம் உத்தரஸ்தானத்தில்

"ग्रहैरपि हि जायन्ते प्रच्छन्नैर्व्याधयः शिशोः ।
कर्म शस्तमतस्तेषु दैवयुक्त्याश्रयं सदा ॥ "

'க்ரஹைரபி ஹி ஜாயந்தே ப்ரச்சந்நைர்வ்யாதய: ஶிஶோ:।
கர்ம ஶஸ்தமதஸ்தேஷு தைவயுக்த்யாஶ்ரயம் ஸதா' ॥

'பிரத்தியக்ஷமாய்க் காணப்படாமல் வேறுருவம் பூண்டு மறைந்து கொண்டிருக்கும் கிரஹங்களாலும் சிசுவிற்கு வியாதிகள் உண்டாகின்றன. அதற்காக அந்த வியாதிகளில் மணி மந்தி

ராதி ரூபமான தைவாசிரய சிகித்ஸையும் எப்பொழுதுமே சிறந்ததாகும்.'

என்று கிரஹபாதையில் ரோகாதிகள் உண்டாகுமென்று கூறப்படுகின்றது. இதைப்பற்றி அதே உத்தரஸ்தானத்தின் மூன்றுவது அத்தியாயத்தில் இதிஹாஸ பூர்வகமாக கிரஹங்களின் விபரம் கூறப்படுகின்றது.

"पुरा गुहस्य रक्षार्थे निर्मिताः शूलपाणिना ।
मनुष्यविग्रहाः पञ्च सप्त स्त्रीविग्रहा ग्रहाः ॥"

'𑌪𑍁𑌰𑌾 𑌗𑍁𑌹𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾𑌃 𑌶𑍂𑌲𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ।
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌸𑌪𑍍𑌤 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾 𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 ॥

'முன்காலத்தில் சுப்பிரமணிய சுவாமி சிசுவாயிருந்தபோது அவரை இரக்ஷிப்பதற்காக பரமேசுவரனால் புருஷ உருவம் கொண்டதாக ஐந்து கிரஹங்களும், ஸ்திரீ உருவம் கொண்டதாக ஏழு கிரஹங்களும் ஸிருஷ்டிக்கப்பட்டதுகளாம்'

என்று தொடங்கி, ஸ்கந்தன், விசாகன், மேகாஸ்யன், சுவக்கிரஹம் பிதிருகிரகம் என்பதாக ஐந்து புருஷக்கிரஹங்களின் பெயரையும், சகுனி, பூதனை, சீதபூதனை, அதிருஷ்டிபூதனை, முகமண்டிகை, ரேவதீ, சுஷ்கரேவதீ என்பதாக ஸ்திரீ கிரஹங்களின் பெயரையும்கூறி 'தே காமரூபிண:' இந்தக்கிரஹங்கள் இஷ்டம்போல் உருவத்தையெடுத்துக் கொள்ளக் கூடியதுகள் என்றும், சுப்பிரமணிய சுவாமி யௌவனப் பருவமடைந்தபின் இந்தக் கிரஹங்களுக்கு வேலையில்லாமலாகவே அவைகள் பரமேசுவரனிடம் தங்கள் தொழிலைப்பற்றிப் பிரார்த்திக்கும்பொழுது

"न तिथिष्वप्यतिथयो देवताः पितरोऽपिवा ।
येषु वेश्मसु पूज्यन्ते निवृत्ताचारवर्त्मसु ॥
उत्सन्नबलिहोमेषु भिन्नकांस्योपभोजिषु ।
हरध्वं तेषु बालानामारोग्यं धारि शर्म च ॥"

''𑌨 𑌤𑌿𑌥𑌿𑌷𑍍𑌵𑌪𑍍𑌯𑌤𑌿𑌥𑌯𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑍋𑌽𑌪𑌿𑌵𑌾 ।
𑌯𑍇𑌷𑍁 𑌵𑍇𑌶𑍍𑌮𑌸𑍁 𑌪𑍂𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌸𑍁 ॥
𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌬𑌲𑌿𑌹𑍋𑌮𑍇𑌷𑍁 𑌭𑌿𑌨𑍍𑌨𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑍋𑌪𑌭𑍋𑌜𑌿𑌷𑍁 ।
𑌹𑌰𑌧𑍍𑌵𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌮𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌂 𑌧𑌾𑌰𑌿 𑌶𑌰𑍍𑌮 𑌚 ॥'

'ஓ! கிரஹங்களே எந்த வீடுகளில் தேவரிஷி பிதிருக்களைப் பூஜிக்க வேண்டிய திதிகளில் கூட அவர்கள் பூஜிக்கப்படவில்லையோ எந்த வீட்டிலுள்ள ஜனங்களிடம் நல்வழி நல்லொழுக்கமில்லையோ எந்த வீடுகளில் பூஜை ஹோமம் முதலிய நற்கிரியை கிடையாதோ எங்குள்ள ஜனங்கள் உடைந்த வெண்கல பாத்திரத்தில்புசிக்கின்றார்களோ அந்தவீடுகளிலெல்லாம் போய் அங்குள்ள குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் ஜீவிதத்தையும் சுகத்தையும்அபகரித்துப் பிழையுங்கள்'

என்று பரமேசுவரன் அவர்களுக்கு வரன் கொடுத்தாரென்றும் அதனால் அந்தக் கிரஹங்கள் அம்மாதிரியுள்ள வீடுகளில் புகுந்து கோட்டான் பூனை முதலிய பிராணிகளின் உருவம் பூண்டுஅனேகமாய் பர்வகாலங்களில் சமயம் பார்த்திருந்து குழந்தைகளைப் பயப்படுத்திப் பிடித்துக்கொள்ளுகின்றனவென்றும் விரிவாய்கூறப்பட்டிருக்கின்றது. பிறகு அததற்குள்ள இலக்ஷணங்களும் பரிஹாரங்களும் கூறப்படுகின்றன. அவைகளுள் முக்கியமானதாமிந்த ஜாதகர்மம். தற்காலத்தில் பெரும்பாலோர் இத்தகையஉத்தமகாரியத்தை விட்டுப்போட்டு குழந்தைகள் பிணியுண்டு கஷ்டப்படும் பொழுது வெவ்வேறு ஸாதனங்களைத் தேடுகின்றார்கள். வேறு ஜாதியானாலும் வேறு மதமுள்ளவனாகிலும் அவனிடம் சென்று மந்திரம் செய்து கொள்பவர்களும் முடிகயர் முதலான காரியம் செய்து வருபவர்களாகப் பிராமண குலத்திலுதித்தவர்களே காணப்படுகிறார்களென்றால் கலியின் கொடுமை இதைவிட அதிகமுண்டோ? இம்மாதிரிவிபரீத காரியத்தால் மேன்மேலும் கஷ்டப்படுகிறார்களேயல்லது சுகமடைந்ததாகக் காண்பது அரிதாயிருக்கின்றது. இப்படி வராமல் எல்லோர்களும் உசிதமான காலத்தில் உரிய ஸம்ஸ்காரங்களைச் செய்து தீர்க்காயுஸ்ஸான குழந்தைகளுடன் சுகமாய் வாழ்வார்களாக சுபம்;

பத்திராதிபர்,

காந்தி கூறும் விதவாவிவாஹத்திற்கு மறுப்பு.

(514-வது பக்கத்தொடர்ச்சி)

பின்னும் பிராமண மாணவர்களைப்பார்த்து இப்பால்ய விவாக வழக்கத்தை நிறுத்தமுடியாவிட்டால் நீங்கள் பிராமண்யத்தை இழந்தவர்களாவீர்களென்று நான் கூறுவேன் என்று பேசியிருக்கிறார்.

பிராமண்யத்தை உலகில் நிலைநிறுத்துவதும், அதை இழக்கும்படி செய்கிறதும், காந்தி கைக்குள்ளிருப்பதாகத் தெரிகின்றது. ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்கிற முக்கர்மாக்களையும். செய்யவல்லவர்களான பிர்ம விஷ்ணு ருத்திரர்கள்கூட இவ்விதம் தைர்யமாக ஒரு ஜன்மாவை அடைந்தவர்களை மத்தியில் அதை இழந்தவர்களாக நாங்கள் கூறுவோமென்று சொல்வதற்கியலாத ஒரு கார்யததை இவர் நான் கூறுவேன் என்று மார்தட்டுவது எவ்வளவு ஸாஹஸமான கார்யம். இவர் பிராமண்யத்தை இருக்கு என்றாலும் இல்லையென்றாலும் இதற்காக உலகில் ஒரு கார்யமும் வைதிகப்பிராமணகோஷ்டியில் அதிலும் இத் தென்தேசத்தில் நிச்சயமாய் நடைபெறுதென்பது திண்ணம்.

ஆனாலும் இவர் தம் வாக்கிற்கு இவ்வளவு மதிப்பு ஜனங்கள் அதிலும் பண்டிதர்கள் வைத்திருக்கிறார்களென்பதை சற்றும் உற்றுநோக்காமல் தாமாகவே தம்மை மஹரிஷியாகக் கருதிக் கொண்டு சாபம்கொடுப்பதாக எண்ணி பொருளில்லாத வார்த்தை களைவீணில் ஸபைகளிலுபயோகப்படுத்தி ஆஸ்திகர்களின் மனதைப்புண்படுத்துவதில் யாது பயனைக்கருதியிருக்கிறாரோதெரியவில்லை.

விதவைகளிடம் காந்திக்கு இருக்கும் கருணையால் அவர்களை எப்படியாவது தம்பதிகளாகச் சேர்க்கவேண்டுமென்கிற இவர் அபிப்ராயப்படி ஒருவன் விதவாவிவாகம் செய்துகொள்வானேயாகில் அதினால் அவனுக்கு இவ்வுலகத்திலோ பரலோகத்திலோ நேரும் கஷ்டத்திற்கு இவர் பாத்தியப்படுகிறாரா? விதவையை விவாகம் செய்துகொண்ட ஒருவனுடைய பந்துஜனங்கள் சாஸ்

திரத்திற்கும் சிஷ்டாசாரத்திற்கும் விரோதமான இந்தக் கார்யத்தை இவன் செய்தானென்று அவனை விலக்கிவிட்டால் காந்தியால் என்ன செய்யமுடியும்? வெளியிலுள்ள பெரிய கம்பெனிகளுக்கு எழுதி அவனுக்கு பந்துக்களை வாங்கிக்கொடுப்பாரா? அல்லது பந்துக்களுக்குப்பதிலாக வேறு மனுஷியரைச்சேர்த்துவிடுவாரா? அவ்விதம் சேர்த்துவிட்டாலும் அந்தந்தஜாதி ஆச்ரமமுறைகளில் பந்துக்களைக்கொண்டே அவசியம் நடைபெறவேண்டிய கார்யங்கள் எங்ஙனம் நடைபெறும்? இவ்வுலகில் நடைபெறும் கார்யங்களே இவ்விதம் திண்டாடும்பொழுது விதவாவிவாகமென்னும் கெட்டகாரியத்தைச் செய்ததால் பரலோகத்தில் அநுபவிக்கப்படும் நரகதுக்கங்களை இவரால் எப்படி விலக்கமுடியும்? ஒரு சமயம் காந்தி நேரில் வந்து நான்தான் விதவாவிவாகம் செய்துகொள்ளச் சொன்னேன், அந்தக்குற்றத்திற்கு நீங்கள் அவர்களைத்தண்டிக்கக் கூடாதென்று "தர்மராஜாவிடத்தில் சிபார்சு செய்து விடுவிக்கிறேமென்று அவர் சொன்னபோதிலும் அதை அற்பமேனும்நாம் நம்புவதற்கிடமில்லை. மரித்தபிறகுயார்யார் எந்தெந்தவிடத்தில்எவ்விதநிலைமையில்திண்டாடப்போகிறேமோ? அவரவர்களுக்குஏற்படும் துக்கங்களையே விலக்கமுடியாமல் கஷ்டப்படும்பொழுது பிறருடைய துக்கத்தைப் போக்குவதென்பது எங்ஙனம் சாத்தியம் ஆகும்?

பின்னும், (2) விதவைகளுக்குச்செய்யப்படும் விவாகமானது புனர்விவாகம் என்றுகூட சொல்வதற்கில்லை. முதல்விவாகம் என்றுதான் சொல்லவேண்டும். அவர்கள் இதற்குமுன் செய்து கொண்ட விவாகமானது உண்மையில் விவாகமில்லையென்றும்" கருணையால் காந்தி உபதேசிக்கிறார்.

இந்த உபதேசத்தைச் செவியுறும் எவர்களுக்குத்தான் ஆச்சர்யமுண்டாகாது. ஜகத்திலுள்ள ஜனங்கள் பூராவும் அறிவில்லாதவர்கள்; நாம்எதைச்சொன்னாலும் நம்புவார்களென்று, தமக்குத் தோன்றியதையெல்லாம் 'விதவாவிவாகம், ருதுமதிவிவாகம், தீண்டாமை ஒழிப்பது" முதலிய சாஸ்திர விரோதமான கார்யங்களை "தர்மோபதேசமாகக் கருதி லோகக்ஷேமார்த்தமாய் உபதேசிக்க முன்வருகிறேனென்பது நன்கு வெளியாகவில்லையா? அவ்விதமில்லாவிடில் விதவைகளுக்கு முன்செய்த விவாகம் உண்மையில் விவாகமல்லவென்று மானிடப்பிறவியைப் பெற்றவர்களுக்

குள் எவராகிலும் கூறத்துணிவாரா? முந்திய விவாக கர்மாவானது சாஸ்திரமுறைப்படி அனுஷ்டிக்கவில்லையா? அல்லது அந்தப் பதியைக்கொல்வதற்காகச் செய்த ஆபிசார ப்ரயோகமா? அல்லது அது ஓர் விளையாட்டா? முன்செய்த விவாகத்தால் மாத்திரம் பதிகளுடன் சுகமாயிருக்கும் ஸ்திரீகள் யாவரும் விவாகம் ஆனவர்களா, ஆகாதவர்களா? இவர் அபிப்ராயப்படி விவாகம் ஆகாதவர்களென்றே சொல்லவேண்டும். இந்த வார்த்தைகள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன பாருங்கள்! ஒரு சமயம்முன் பதியிருந்தால் விவாகமானவர்கள் தான். முதல் பதியின்காலம் சென்றுவிட்டபடியால் அந்த விவாகமும் ரத்தாய்விட்டது என்று கூறுகிறேமென்றால் எந்தப்ப்ரமாணத்தைக்கொண்டு இவ்விதம் கூறுவது. அந்த விவாகம் ரத்தாகவில்லையென்று கூறும் உங்களுக்கு எது ப்ரமாணமென்றால் சாஸ்திரத்தையே ப்ரமாணமாகக் கூறுகிறோம். இவர் கொள்கைக்கு, இவர் வார்த்தையைத் தவிர வேறு ப்ரமாணம் கிடைக்கமாட்டாது. இவர் அபிப்ராயப்படி விதவைக்கு மறுமணம் செய்வித்தாலும் ஆறுமாதத்திற்குப்பிறகு அப்பதியின் காலம் சென்றுவிட்டால் மறுபடியும் அவளுக்கு மணம் செய்விக்கிறதா இல்லையா? இவர் அபிப்ராயப்படி செய்யத்தான் வேண்டும். இவ்விதம் எவ்வளவுகாலம்வரையில் ஒரு ஸ்திரீக்கு மறுமணம் செய்கிறதென்றும், முந்திய விவாகம் விவாகமல்லவென்றும் காந்தி அபிப்ராயப் படுகிறாரோ தெரியவில்லை? பால்ய விதவைகளுக்கு உலகவாழ்க்கையில இருந்துகொண்டு பதியுடன் விஷயசுகத்தை அநுபவிக்கவேண்டிய காலத்தில் அவ்வித சுகமில்லாமல் கஷ்டப்படுகிறார்களே என்று கருணைகொண்டு விதவைகளும் சுகித்திருக்கவேண்டி அவர்களுக்கு மறுமணம் செய்விக்கலாமென்று கூறும் இவர் கருத்தினபடிவிதவைகளுக்கு போகத்தில் இச்சையில்லாமல் இனி எங்களுக்குப் பதி வேண்டாமென்று வெறுப்பு எற்படுகிற பரியந்தம் விவாகம் செய்ய வேண்டுமென்று தெரிகின்றது.

நம் தேச க்ஷேமத்தையுத்தேசித்து இம்மாதிரி தர்மஸ்தாபனம் செய்ய ஒரு மகானும் இதுவரையில் அவதரித்ததாகத் தெரியவில்லை. இனியும் அவத்ரிக்கமாட்டார்களென்றே நிச்சயமாய்க் கூறலாம். இவர்கள் செய்யும் முயற்சியைக் கவனித்தால் நம் மதத்தையும் அதற்கு அடிப்படையாய் நம் பெரியோர்களால்

வெகு காலமாக மிகவும் பாடுபட்டு பாதுகாக்கப்பட்டுவந்த வர்ணாச்ரமதர்மங்களையும் கூடிய சீக்கிரம் அடியோடு அழிக்கவேண்டும் என்று கங்கணம் பூண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஸ்திரீகளுக்கு விதவாவிவாகமென்கிற ஓர் பெரிய தோஷத்தை ஏற்படுத்தி அவர்களை தோஷமுள்ளவர்களாகச்செய்து வர்ணஸாங்கர்யத்தையும் உண்டுபண்ணி ஆஸ்திகர்கள் அனைவரும் கொடிய நாகதுக்கத்திற்கு ஆளாகும்படி செய்யத்தான் இந்தக்காரியத்தில் எத்தனம் செய்கிறார்களென்பது திண்ணம்.

இந்த அபிப்ராயத்தையே இவரால் முக்ய ப்ரமாணமாகக் கருதப்படும் கீதாசாஸ்திரத்தில்

धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ।
अधर्माभिभवात् कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ॥
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः ।
संकरो नरकायैव कुलघ्नानां कुलस्य च ॥
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ।
दोषैरेतैः कुलघ्नानां वर्णसंकरकारकैः ॥
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ।
उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ॥
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ।

𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ॥
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ।
𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 ॥
𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ।
𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ॥
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ॥
𑌨𑌰𑌕𑍇 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌵𑌾𑌸𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 ।

தர்மம் நடைபெறாமல் போனால் குலத்தைப் பூராவும் அதர்மம் வியாபித்துக்கொண்டு அதிக அவமானத்தையுண்டுபண்ணுகிறது. அதர்மத்திற்கு வியாபகமேற்பட்டால் உடனே குலஸ்திரீகள் கெட்டகாரியங்களில் பிரவர்த்தித்து மிகவும் தோஷமுள்ளவர்க

ளாகிறார்கள். ஸ்திரீகள் துஷ்டர்களானால் வர்ணஸாங்கர்யமும் ஏற்பட்டுவிடும். அந்த வர்ணஸாங்கர்யம் நரகத்தையும் பொருட்டு ஆகின்றது. இவர்களுடைய பிதுருக்கள் பிண்டம் ஒன்றுமில்லாமல் நரகத்தில் விழுகிறார்கள். குலங்களை அடியோடு நாசம் செய்கின்றனவும் வர்ணஸாங்கர்யத்தை உண்டுபண்ணுகின்றனவுமான இந்த தோஷங்களால் வெகுகாலமாய் நிலைபெற்றிருந்த குலதர்மம், ஜாதிதர்மம், இவையாவும் அடியோடு நாசத்தையடைகின்றன. ஸ்வதர்மத்தை இழந்த ஜனங்களும் எப்பொழுதும் நரகத்திலேயே வஸிக்கிறார்களென்று ஸ்ரீ பகவான் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார். இவ்விதம் கண்டிப்பாய்க் கூறும் சாஸ்திரங்களைச் சற்றும் கவனியாமல் லோகக்ஷேமார்த்தமாய்ப் பாடுபடுகிறேனென்று வெளிவேடம்பூண்டு கலியால் விரட்டப்பட்டதுபோக ஆங்காங்கு நடைபெறும் பாக்கியாயுள்ள ஸநாதனதர்மங்களையும் அறவே ஒழித்து ஸகல ஜனங்களையும் கெட்டகர்மாவைச் செய்யும்படி ஏவி நரகத்திற்கு அனுப்புவதைக் காட்டிலும் குரூரமான பாபச் செயல் வேறு என்ன இருக்கிறது?

காந்தி அவர்கள் இனியாகிலும் சாஸ்திர ஸம்பந்தமான வர்ணாச்ரம தர்மங்களைச் சீர்திருத்த முன்வந்து கொடிய பாவத்திற்கும் ஸாதுக்களுடைய நிந்தைக்கும் உட்படாமல் லௌகிக விஷயங்களை மாத்திரம் கவனித்தால் அவர்களுடைய வாக்குக்குக் கௌரவமும் லோகக்ஷேமமும் ஏற்பட்டாலும் ஏற்படலாமாகையால் அந்த விஷயத்திலேயே அவர்களை வேலை செய்யும்படி அருள் புரியவேண்டுமென்று அடியில்வரும் சுலோகத்தால் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை ப்ரார்த்தித்து இவ்விஷயத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன்.

धर्मग्लानिरुदेति यत्र भगवन् तत्रावतीर्य स्वयं
रक्षामीति विधाय संगरमिह त्वंजोषमास्से कथम् ।
त्यक्त्वा शास्त्रमधर्ममद्य कतिचित् जल्पन्ति धर्मच्छलात्
तेषां सन्मतिदानतोऽखिलजगत् संपालयेत्यर्थये ॥

𑌧𑌰𑍍𑌮𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍁𑌦𑍇𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌤𑌤𑍍𑌰𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌰𑌕𑍍𑌷𑌾𑌮𑍀𑌤𑌿 𑌵𑌿𑌧𑌾𑌯 𑌸𑌙𑍍𑌗𑌰𑌮𑌿𑌹 𑌤𑍍𑌵𑌂𑌜𑍋𑌷𑌮𑌾𑌸𑍍𑌸𑍇 𑌕𑌥𑌮𑍍 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌮𑌦𑍍𑌯 𑌕𑌤𑌿𑌚𑌿𑌤𑍍 𑌜𑌲𑍍𑌪𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌚𑍍𑌛𑌲𑌾𑌤𑍍
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌨𑍍𑌮𑌤𑌿𑌦𑌾𑌨𑌤𑍋𑌽𑌖𑌿𑌲𑌜𑌗𑌤𑍍 𑌸𑌂𑌪𑌾𑌲𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌯𑍇 ॥

ஹே பகவன்! ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமென்கிற மூக்கர்மாக்களை யும் செய்யக்கூடிய சக்தி பொருந்தியவராயும் ஸகல லோகங்களுக் கும் ஈசனுயும் விளங்கும் ஹே கிருஷ்ணபகவானே! எந்த ஸமயத் தில் தர்மத்திற்குக் குறைவு ஏற்படுகின்றதோ அச்சமயத்தில் நான் அவதரித்து தர்மத்தை ஸ்தாபனம் செய்கிறேனென்று பிர திக்ஞை செய்துவிட்டு இந்த ஸமயத்தில் நீர் மௌனமாயிருப்பது உசிதமா? இந்த ஸமயத்தில் என்ன ஸம்பவித்திருக்கிறதென்றல் சில ஜனங்கள் சாஸ்திரவிதிகளை விட்டுவிட்டு தர்மம் என்ற பெயரை வெளிக்குக் கூறிக்கொண்டு அதர்மத்தை உபதேசிக்க முன்வந்துவிட்டார்கள். ஆகையால் இது தர்மம், இது அதர்மம், என்று புரியாமல் புத்தி மாறுதலேயடைந்திருக்கும். அவர்களு டைய புத்தியைச் சிறந்த உண்மையான தர்மத்திலேயே பற்று தலையடையும்படி செய்து ஸகல உலகங்களையும் நன்கு பாதுகாக்க வேண்டுமாக ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். சுபம்,

உபபத்திராதிபர்'

ஸ்ரீ பகவத்கீதோபந்நியாஸ ஸமாப்தி வைபவம்

பொன்மலே,

ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் இவ்வூருக்கு விஜயமான காலத்தில் செய்த ஆக்ஞாப்பிரகாரம் இவ்வூர் வாஸிகளான ஆஸ்திக மஹாஜனங்க ளின் ஆதாவின் கீழ் சென்ற அக்ஷய வருஷம் வைசாக மாஸத் தில் பிரம்மஸ்ரீ போலகம் சுந்தரேசசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ பகவத்கீதோபந்நியாஸம் துவக்கப்பட்டு குருவாரந்தோறும் நட ந்து கொண்டு வருகிற உபந்நியாஸத்தின் சுருக்கமும் நமது ஆரிய தர்ம வாயிலாகப் பிரசுரமானதும் யாவருமறிந்த விஷயம்.

தற்காலம் 18-அத்தியாயங்களும் உபந்யஸிக்கப்பட்டு ஸ்ரீ மத்பகவத்கீதோபந்யாஸ ஸமாப்தி வைபவத்தைச்சென்ற ஆவணி மாஸம் 19உ க்குச் சரியான 4-9-27 ஞாயிற்றுக்கிழமை பொன் மலே (F) டைப்பில் ஸ்ரீ ஜகத்குரு கடாக்ஷத்தினுல் காலையில் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனையும் ஸ்ரீ பகவத்கீதாப் பிரவசனமும் பிராம்மண ஸந்தர்ப்பணையும் விமரிசையாய் நடந் தது. அஸ்தமனத்திற்குப் பிறகு ஸ்ரீ பகவத்கீதை 18-அத்தியா யங்களும் ஸங்கிரஹமாக உபந்யஸிக்கப்பட்ட பிறகு ஸ்ரீ ஜகத் குரு மஹாஸ்வாமிகள் அவர்களிடமிருந்து அனுக்கிரஹிக்கப்

பட்ட அக்ஷதாப் பிரஸாதங்களும் திரவிய ஸன்மானங்களும் மகா-௱-ஸ்ரீ வக்கில் R ஸ்ரீனிவாசய்யர் அவர்களால் ஸ்வல்ப உபந்யாஸத்துடன் வேதகோஷங்களுக்கிடையே எல்லோரும் நின்றுகொண்டு பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞாபிரகாரம் அவர்களால் அனுக்கிரஹிக்கப்பட்ட "அத்வைத ஸித்தாந்த கேஸரி" என்னும் பட்டத்தை 2-பவுனில் செய்யப்பட்ட ஒரு மெடலில் எழுதி பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு வேதகோஷங்களுக்கிடையே அளிக்கப்பட்டது. விஜயமாயிருந்த பக்த கோஷ்டிகள் ஸகலருக்கும் ஸ்ரீ ஜகத்குரு பிரஸாதங்கள் வழங்கப்பட்டன. எல்லோரும் பரமானந்தத்தை அடைந்தார்கள்.

குறிப்பு:— ஷை உபந்நியாஸத்தின் சுருக்கம் 8-வது அத்தியாயம் வரையில் தான் ஆரியதர்மம் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது. 9-வது முதல் பாக்கி அத்தியாய உபந்நியாஸங்களின் சுருக்கத்தை இனிவரும் ஆரியதர்மம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வி. என். ராமனுதன்.

பிருமணர்களின் மதவிஷயமாக மகாத்மாஜி பிரவேசிக்காமலிருப்பாரா

மகாத்மாஜி அவர்கள்,

7—9—27ல் பச்சையப்பன் கலாசாலை மாணவர்களிடம் உபதேசித்த விஷயங்களில் சிலவற்றின் அபிப்பிராய பேதத்தை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளும் விஷயத்தில் அதிருப்தியடைய மாட்டீர்களென்று பூர்ணமாக நம்புகிறேன்.

தங்களுடைய மனதில் வெகுநாளாக உத்வேகத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்த பிராமணர்கள் விஷயமாக மாணவர்களைக் கொண்டு திருப்தி அடைந்துவிடலாமென்ற நம்பிக்கையுடன் விதவைகள் விஷயமாக உங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்து பூர்த்தி செய்துகொண்ட விஷயத்தில் நீங்கள் திருப்தி அடைவதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

இந்துமதத்தின் பிராமணர்கள் மதவிஷயமாக செய்துவரும் காரியங்களில் தங்களிடம் அபிப்ராயபேதம் விசேஷித்திருப்பது தெரிந்த விஷயம். பிராமணர்கள் அதை ஸ்திரப்படுத்தக்கூடிய

(பிராம்மண கைம்பெண்கள் கிடைக்காவிட்டால் விரும்பும் மற்றேந்தப்பெண்களையும் விவாகம் செய்துகொள்ளுங்கள்) என்று சொல்லி இருக்கிறீர்கள்.

வர்ணாச்ரம பேதமில்லாமல் நடக்க எந்த காலத்தில் யாரால் பிரயத்தனப்பட்டு ஆரம்பிக்கப்படுகிறதோ அந்தக்காலம் தான் புனிதமான ஒரு மதம் அழிவு அடையக்கூடிய காலமென்பதைத் தெளிவாகத்தாங்கள் உணர்ந்திருந்தும்அப்படியேற்பட்டால்நான் திருப்தியடைவேனென்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலிருந்து உங்கள் ஆதிகொள்கைகளில் இதுவும் ஒரு முக்யமான கொள்கை யென்பதை விசாலப்படுத்துகின்றது.

தாங்கள் பொதுவாக இந்துமதத்தைப்பற்றி இந்து என்ற ஹோதாவில் அபிப்ராயத்தைத் தெரிவிக்கும் பக்ஷத்தில் அன்புடன் எல்லாரும் வரவேற்றுக்கொள்வார்கள்.

தனிப்பட்ட பிராமணர்கள் விஷயமாக தாங்கள் பிரவேசிப்பதால் தாங்கள் ஆரம்பித்த விஷயங்களுக்கெல்லாம் விபரீதமான செய்கைகள் ஏற்படுவதோடுகூட இந்தியா முழுவதும் துக்ககரமான சம்பவம் ஏற்படுவதை நீங்களே பார்க்கக்கூடிய சர்தர்ப்பமும் ஏற்படக்கூடுமென்பது திடமான அபிப்பிராயம். இந்தியாவின் வருங்காலநிலைமை தங்கள் அபிப்பிராயத்தாலே ஏற்படக்கூடியதென்பதாக சில பாமர ஜனங்கள் நம்பிக்கை யுடனிருப்பதை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

இந்து மதத்தின் ஒருபகுதியான பிராமணர்கள் விஷயத்தில் சீர்திருத்தம் செய்ய தாங்கள் பிரவேசிப்பது தாங்கள் அந்த மதத்திற்கு ஓர் உத்பாதம் போல் அழிவுக்கு வழி உண்டுபண்ணுமென்பதைநீங்கள்உணர்ந்து கொள்வீர்களென்று நம்புகின்றேன்.

நீங்கள் இந்தியா விஷயத்திலும் இந்துஜனங்களிடம் பூர்ண நம்பிக்கையுடன் துவேஷமில்லாமல் பாடுபட்டு அதன் பலன்களை இந்தியாவில் எந்த இந்துமத ஸந்ததிகளாவது அடைய வேண்டுமானல் தாங்கள் பிராமணர்கள் மதவிஷயத்தில் புகாமலிருந்தால் நீங்கள் ஆரம்பித்தகாரியம் கஷ்டமில்லாமல் பூர்த்தியடைவதோடு இந்தியர்களும் நற்கியாதியடைய தகுந்த மார்க்கமேற்படுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

இப்படிக்கு தங்கள் அன்புள்ள,

என். ஆர். எஸ். அய்யங்கார்.

ஆ. ஸ்ரீ. வே. வரதாச்சாரி.

பிரம்மயக்ஞம்.

ஓர் ஸந்தேகம்.

ஆஸ்திக வித்வான்களே! பிராமணர்களுக்கு அனுஷ்டிக்க வேண்டிய கர்மாக்கள் அனேகமிருந்தபோதிலும் அவைகளில் மிகவும் பெருமை வாய்ந்ததாகவே 'பிரம்மயக்ஞம்' என்றும் ஓர் கர்மா சாஸ்திரங்களில்கூறப்பட்டுள்ளது.

पञ्च सूना गृहस्थस्य चुल्ली पेषण्युपस्करः ।
कण्डनी चोदकुम्भश्च बध्यते यास्तु वाहयन् ॥
तासां क्रमेण सर्वासां निष्कृत्यर्थं महर्षिभिः ।
पञ्च कॢप्ता महायज्ञाः प्रत्यहं गृहमेधिनाम् ॥

𑌪𑌞𑍍𑌚 𑌸𑍂𑌨𑌾 𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌚𑍁𑌲𑍍𑌲𑍀 𑌪𑍇𑌷𑌣𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌕𑌰𑌃 ।
𑌕𑌣𑍍𑌡𑌨𑍀 𑌚𑍋𑌦𑌕𑍁𑌮𑍍𑌭𑌶𑍍𑌚 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌹𑌯𑌨𑍍 ॥
𑌤𑌾𑌸𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 ।
𑌪𑌞𑍍𑌚 𑌕𑍢𑌪𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

என்பதாகவே மனுவும் (அத்-3. ச்லோ-68-69) கிருஹஸ்தர்களுக்கு பிரதிதினமும் ஸம்பவிக்கும் பாபத்தை நிவர்த்திப்பதற்காகவே பஞ்சமஹாயக்ஞங்களேயும் விதித்து அசக்தியால் சிலது அனுஷ்டிப்பதற்கு ஸௌகர்யப்படாதபோதிலும் பிரம்மயக்ஞத்தை மாத்திரம் "स्वाध्याये नित्ययुक्तस्स्यात्" 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 என்னும் வசனத்தால் கட்டாயம் அனுஷ்டித்தே தீரும் என்று உறுதியாகவே கூறினர். ஆகையால் தான் श्रुति 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿யிலும் अधीयीतैव स्वाध्यायम् 𑌅𑌧𑍀𑌯𑍀𑌤𑍈𑌵 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌮𑍍 என்னும் வசனமானது एव 𑌏𑌵 காரத்தால் 𑌋𑌷𑌿மனுவின் அபிப்பிராயத்திற்கு ஆதாரமாகவே காணப்படுகிறது. இதன் மஹிமை தைத்திரீயாரண்யகம் 2-வது प्रश्न 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨த்தில் சொல்லியிருப்பது ஆஸ்திகர்கள் யாவரும் அறிந்த விஷயமே. இதை யனுஷ்டிக்கும் முறையும் விரிவாகவே அவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனபோதிலும் சில சிஷ்டர்களின் ஆசாரத்தால் இதில் ஓர் ஸந்தேகம் ஏற்படுகின்றது. என்னவென்றால் ब्रह्मयज्ञप्रकरणத்தில் சுருதியானது உபக்ரமத்தில் வ்யாஹ்ருதியையும்காயத்திரியையும் உச்சரிக்கும்படியாகவும் காயத்திரியை மாத்திரம் 'पच्छ:' 'अर्धर्चश:' 'अनवानम्' 𑌪𑌚𑍍𑌛𑌃 𑌅𑌰𑍍𑌧𑌰𑍍𑌚𑌶𑌃 𑌅𑌨𑌵𑌾𑌨𑌮𑍍 என்று பாதம் பாதமாகவும்பகுதிருக்காவும் அவிச்சின்னமாகவும்சொல்லும்படியா

கவும் விதித்திருக்கிறதேயன்றிவ்யாஹ்ருதியைக்கூட விபஜித்துச் சொல்லும்படியாக விதித்துக்காணவில்லை. ஆனால் சில சிஷ்டர்கள் வ்யாஹ்ருதியைக்கூட விபாகம் செய்து ஷிகாயத்திரியின் விபாகத்துடன்

ओंभूः । तत्सवितुर्वरेण्यम् । ओं भुवः भर्गो देवस्य धीमहि इत्यादिरूपेण ।

𑌓𑌂𑌭𑍂𑌃 । 𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌮𑍍 । 𑌓𑌂 𑌭𑍁𑌵𑌃 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑍇𑌣 ।

சொல்லிவருவதாகக் காணப்படுகிறது. எவ்வளவோ விமரிசையாக இவ்விஷயத்தைச் சொல்லவந்த வேதமானது வ்யாஹ்ருதியின் இவ்விபாகத்தைச் சொல்லாதபடியால் உபலக்ஷணமாகவே இந்த ச்ருதியை வ்யாக்கியானிப்பது அழகில்லையென்றும் ஆகையால்வ்யாஹ்ருதியின் விபாகம் அப்ராமாணிகமென்றும் சில சிஷ்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆபஸ்தம்பர் பிர்ம்மோபதேசப்ரகாணததில்

पच्छोऽर्धर्चशस्ततस्सर्वां व्याहृतीर्विहृताः पादादिष्वन्तेषुवा तथार्धर्चयोरुत्तमां कृत्स्नायाम् । 𑌪𑌚𑍍𑌛𑍋𑌽𑌰𑍍𑌧𑌰𑍍𑌚𑌶𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍀𑌰𑍍𑌵𑌿𑌹𑍃𑌤𑌾𑌃 𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌨𑍍𑌤𑍇𑌷𑍁𑌵𑌾 𑌤𑌥𑌾𑌰𑍍𑌧𑌰𑍍𑌚𑌯𑍋𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌮𑍍 ।

என்னும்வசனத்தால் வ்யாஹ்ருதியையும் பிரித்துச்சொல்லவேண்டியதாகவிதித்திருந்தபோதிலும அதைஇவ்விடத்தில் அதிதேசம் பண்ணுவதறகுப் பிரமாணம் யாது? தயவுசெய்து ஆஸ்திகர்களான வித்வான்கள் பிரமாணததுடன இப்பத்திரிகை மூலமாகவே இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்து தருவார்களென்று மிகவும் ஆவலுடன எதிர்பார்க்கிறேன்.

अयमत्रसंग्रहः—

श्रौतो विभागस्स्वाध्याये सावित्र्या व्याहृतेर्न तु ।
ब्रह्मोपदेशे दृष्टोऽपि सोऽयमत्र कुतो भवेत् ॥

𑌶𑍍𑌰𑍌𑌤𑍋 𑌵𑌿𑌭𑌾𑌗𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍇𑌰𑍍𑌨 𑌤𑍁 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌪𑌿 𑌸𑍋𑌽𑌯𑌮𑌤𑍍𑌰 𑌕𑍁𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

கே. ஆர். அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள்.
வ்யாகரணசிரோமணி.